# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 214/2021 நாள்.27.11.25

PW3- திரு.சந்திரசேகரன் த/பெ. திரு. செல்வமணி

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

சரவணன் ஹேம்குமார் என்பவருக்கு எதிராக வழக்கு போட்டுள்ளார். என்ன பிரச்சனை என்றால் சொத்தை எழுதி கொடுக்காததால் வழக்கு போட்டுள்ளார். சொத்து உள்ள இடம் தெரியுமா என்றால் தெரியும். சொத்தின் புல எண், விஸ்தீர்ணம், நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியாது. சொத்து சம்மந்தமாக என்ன பரிவர்த்தனையானது என்று தெரியுமா என்றால் என்னிடம் ஒருமுறை சரவணன் ஹேம்குமாருக்கு ரூ.5,00,000 கொடுத்தது எனக்கு தெரியும் அதனால் அதற்கு சாட்சி கையெழுத்து போட்டேன். எந்த தேதியில் எழுத்து மூலமான ஆவணம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் படித்து பார்த்தபோது 30.3.2021 என்று எழுதியிருந்தது. அந்த ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் ரூ.5,00,000/- கொடுத்ததற்குதான் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். அவர்கள் விற்பது வாங்குவது குறித்து எவ்வளவு ரூபாய்க்கு பேசபட்டது, எவ்வளவு ரூபாய் கொடுத்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. ரூ.5,00,000/-கொடுத்ததற்கு நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் என்னோடு சுப்ரமணி, பக்கிரி, கமலவாசன் ஆகியோர் போட்டுள்ளார்கள். எதில் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் கிரையஒப்பந்தத்தின் பின்பக்கத்தில் எழுதியதில் கையெழுத்து போட்டோம். வேறு யார் யார் கையெழுத்து போட்டார் என்றால் இல்லை. எழுதி கையெழுத்து போட்டோமா வேறுமென சாட்சி கையெழுத்து போட்டோமா என்றால் பணம் கொடுப்பதை எழுதிய பிறகுதான் சாட்சி கையெழுத்து போட்டோம். எந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுக்கபட்டது என்று எழுதபட்டுள்ளதா என்றால் சரியாக தெரியவில்லை. என் விலாசம் என்ன என்றால் 2/229, ரைஸ்மில் நகர், சோமேஸ்வரபுரம். மேற்கண்ட விபரத்தை கையெழுத்து போடும்போது நான் எழுதினேனா என்றால் எழுதினேன். ரூ.5,00,000 கொடுத்ததாக கிரைய ஒப்பந்தத்தில் உள்ளதை பொறுத்து நாங்கள் 4பேரும் சாட்சியா என்றால் ஆமாம். நான் சாட்சி கையெழுத்து போட்டபோதுதான்

முதன்முதலாக அவர்களுக்குள் உள்ள ஒப்பந்தம் தெரியுமா என்றால் ஆமாம். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் MRF Company, Perambalur. சாட்சி கையெழுத்து போட்ட சமயத்தில் நான் வேலையில் இருந்தேனா என்றால் ஆமாம். ரூ.5,00,000 கொடுத்த கிழமை ஞாபகமுள்ளதா என்றால் இல்லை. என்ன மாதிரியான ரூபாய் நோட்டாக கொடுக்கபட்டது என்றால் ரூ.500 நோட்டுகள். வழக்கு நடந்த இடத்திற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 6வீடுகள் தள்ளி. நான் வாராவாரம் வருவேனா என்றால் வாராவாரம் வருவேன், பேருந்து, கீழபழுவூர் வரை வருவதால் தேவைபட்டால் தினமும் போய்வருவேன். ரூ.5,00,000த்திற்கு வாசகம் எழுதியது யார் என்றால் தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் குறித்து எனக்கு தெரியாது என்றும் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- பா.நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.